## சுருக்கம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் – திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களைச் சேர்ந்த வெள்ளக்கோயில் நகராட்சி, காங்கேயம் பேரூராட்சி மற்றும் 174 ஊரக குடியிருப்புகளுக்கான ரூ.4774 இலட்சம் செலவிலான காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்கும் கூட்டு குடிநீர் திட்டம் – அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் பரிந்துரை – நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவரி) துறை

அரசாணை (நிலை) எண். 12

நாள் 19.1.2010.
தை 6, திருவள்ளுவர் ஆண்டு 2041.

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்166 ஊரக வளர்ச்சி துறை நாள் 27.5.1997.
2. அரசாணை (பத்தாண்டு) எண்443 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி2) துறை நாள் 21.10.2008.
3. அரசாணை (நிலை) எண்45 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி2) துறை நாள் 25.3.2009.

மீண்டும் படிக்கப்பட்டது:

4. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் கடித எண் கோ.வெள்ளக்கோயில் /உபொ7/ திமேபி/2007/ நாள் 22.10.09.

---

ஆணை :

மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தற்போது பயனில் உள்ள முத்தூர் காங்கேயம் கூட்டுக்குடிநீர்த்திட்டத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகளுக்கு கீழ்க்காணுமாறு குடிநீர் விநியோகம் செய்யும் வகையில் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார் :-

| பயனாளிகள் | இடைக்காலத் தேவை (2006) நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர் | உச்ச காலத் தேவை (2021) நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர் |
|---|---|---|
| வெள்ளக்கோயில் நகராட்சி | 3.00 | 4.00 |
| தாராபுரம் நகராட்சி | 4.56 | 6.88 |
| காங்கேயம் பேரூராட்சி | 2.25 | 3.00 |
| இதர 6 பேரூராட்சிகள் | 8.10 | 10.80 |
| 994 ஊரக குடியிருப்புகள் | 7.66 | 8.67 |
| மொத்தம் | 25.57 | 33.35 |

மேலும், இத்திட்டத்தின் மூலம் 2024–ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 24.44 மில்லியன் லிட்டரும், 2039–ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 30.64 மில்லியன் லிட்டரும் குடிநீர் விநியோகிக்க முடியும் எனவும், மேற்கண்ட பயனாளிகளுக்கும் மற்றும் விடுபட்ட 611 குடியிருப்புகளுக்கும், மக்கட்தொகைக்கேற்ப 2024–ம் ஆண்டு குடிநீர் தேவை 36.60 மில்லியன் லிட்டர் எனவும், 2039 ஆம் ஆண்டு தேவை 45.09 மில்லியன் லிட்டர் எனவும் கணக்கிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் தற்போது நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ள மேம்பாட்டுத்திட்டத்தின்படி நகராட்சிக்கான குடிநீர்த் தேவை 70 விழுக்காடு மக்களுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர், மற்றும் 30 விழுக்காடு மக்களுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதமும், பேரூராட்சிக்கு 100 விழுக்காடு மக்களுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதமும், ஊரகக் குடியிருப்புகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 30 லிட்டர் வீதமும் 15 விழுக்காடு குழாய் இணைப்பு மற்றும் தொழிற்சாலைத் தேவையினையும் சேர்த்து குடிநீர்த் தேவை கீழ்க்காணுமாறு கணக்கிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

| பயனாளிகள் | குடிநீர் தேவை நாளொன்றுக்கு மில்லியன் லிட்டரில் | |
|---|---|---|
| | இடைக்காலம் (2024) | உச்சகாலம் (2039) |
| வெள்ளக்கோயில் நகராட்சி | 6.113 | 7.268 |
| காங்கேயம் பேரூராட்சி | 1.397 | 2.418 |
| ஏற்கனவே பயனில் உள்ள 994 குடியிருப்புகளில் 354 குடியிருப்புகள் | 1.001 | 0.997 |
| விடுபட்ட 611 குடியிருப்புகளில், 174 குடியிருப்புகள் | 1.395 | 1.521 |
| விடுபட்ட 437 குடியிருப்புகள் மற்றும் 640 குடியிருப்புகளுக்கான கூடுதல் குடிநீர் அளவு | 2.250 | 2.250 |
| சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் | 12.156 (அல்லது) 12.16 | 14.454 (அல்லது) 14.45 |
| சுத்திகரிப்பு நிலையத்தின் மாற்று சுழற்சி தேவை (5 விழுக்காடு) | 0.60 | 0.73 |
| மொத்தம் | 12.76 | 15.18 |

இக்குடிநீர் தேவையினை காவிரி ஆற்றில் கொடுமுடி அருகில் (15.18 மில்லியன் லிட்டர் குடிநீர்) நீர் எடுப்பு கிணறு (Off-take well) மூலம் பயனாளிகளுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2. இம்மேம்பாட்டுத் திட்டத்திற்கான அமைப்புச் செலவு, ஆண்டு பராமரிப்புச் செலவு, தனிநபர் திட்டச் செலவு மற்றும் 1000 லிட்டருக்கான குடிநீர் திட்டச்செலவு கீழ்க்காணுமாறு

கணக்கிடப்பட்டுள்ளதாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

| பயனாளிகள் | அமைப்புச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) | ஆண்டு பராமரிப்பு செலவு (ரூபாய் இலட்சத்தில்) | தனி நபர் செலவு (ரூபாய்) | 1000 லிட்டருக் கான குடிநீர் செலவு (ரூபாய்) |
|---|---|---|---|---|
| வெள்ளக் கோயில் நகராட்சி | 1203.73 | 48.76 | 3067.00 | 7.69 |
| காங்கேயம் பேரூராட்சி | 928.71 | 27.63 | 2981.00 | 23.93 |
| ஊரக குடியிருப்புகள் | 2641.56 | 115.61 | 2360.00 | 22.69 |
| மொத்தம் | 4774.00 | 192.00 | | |

இத்திட்டத்திற்கு 24.8.2007 அன்று நடைபெற்ற மண்டல தொழில் நுட்ப குழு கூட்டத்திலும் மண்டல அறிவியல் பூர்வமாக நீராதாரம் கண்டறியும் குழு கூட்டத்திலும் இத்திட்டத்திற்கு பரிந்துரை வழங்கப்பட்டுள்ளதாகவும், 4.12.2007 அன்று நடைபெற்ற தலைமை அலுவலக தொழில் நுட்பக் குழு கூட்டத்திலும் 30.10.2008 அன்று நடைபெற்ற மாநில அளவிலான தொழில் நுட்பக் குழு கூட்டத்திலும் இசைவு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

3. இத்திட்டத்தின் பயனாளிகளுக்கான விகிதாச்சாரத் தொகை மற்றும் நிதி பகுப்பு கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| பயனாளிகள் | அமைப்புச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) | நிதி ஆதாரம் |
|---|---|---|
| வெள்ளக் கோயில் நகராட்சி | 1203.73 | சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் அரசாணை எண்.443 நநி(ம)குவ. துறை நாள் 21.10.2008-ல் நிதி ஆதாரம் பெறப்பட்டுள்ளது. திருத்திய மதிப்பீடான ரூ.1203.73 இலட்சத்தில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1199.12 இலட்சத்திற்கு நிதித்துறையின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ரூ.4.61 இலட்சம் ஆய்வுக் கட்டணமாக வெள்ளக்கோயில் நகராட்சியில் இருந்து வசூலிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. |
| காங்கேயம் பேரூராட்சி | 928.71 | 80 விழுக்காடு குறைந்த பட்சத் தேவைத் திட்டத்தின் கீழ் மான்யம் (742.97 இலட்சம்) மற்றும் 20 விழுக்காடு உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்பு (185.74 இலட்சம்) |
| ஊரக குடியிருப்புகள் | 2641.56 | 100 விழுக்காடு குறைந்த பட்சத் தேவைத் திட்டத்தின் கீழ் மான்யம் |
| மொத்தம் | 4774.00 | |

வெள்ளக் கோயில் நகராட்சியின் விகிதாச்சாரத் தொகையான ரூ.1203.73 இலட்சத்தில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான, உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1199.12 இலட்சமும் மீதமுள்ள 4.61 இலட்சம் இத்திட்டத்தின் ஆய்வுக் கட்டணமாக வெள்ளக்கோயில் நகராட்சி நிதியிலிருந்து பெறப்படும் என்றும், காங்கேயம் பேரூராட்சிக்கும், ஊரக குடியிருப்புகளுக்கும் குறைந்த பட்சத் தேவைத் திட்டத்தின் கீழ் நிதி ஆதாரம் பெறப்படவுள்ளதாகவும், மேலும் இத்திட்டம் முடிவுற்றவுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் எனவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி அதிகாரம் அளிக்கப் பெற்ற குழு 8.10.09 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பரிந்துரையை ஏற்று, தனது தீர்மான எண்.6–ல் நாள் 8.10.2009–ல், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களைச் சேர்ந்த வெள்ளக்கோயில் நகராட்சி, காங்கேயம் பேரூராட்சி மற்றும் 174 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காங்கேயம் பேரூராட்சி மற்றும் ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காங்கேயம் பேரூராட்சி மற்றும் ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் பணிக்கான கருத்துருவை அரசுக்கு பரிந்துரை செய்து தீர்மானித்தது. இத்திட்டம் வெள்ளக்கோயில் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாலும், மேலும் இந்நகராட்சிக்கு சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதி ஆதாரம் தனியே இறுதி செய்யப்பட்டுள்ளதாலும், கீழ்க்கண்ட நிதி பகுப்பின் படி இக்கூட்டுக் குடிநீர்த்திட்டத்தை செயல்படுத்த, அனைத்து பயனாளிகளையும் உள்ளடக்கிய நிர்வாக ஒப்புதல் ஆணை வழங்க அரசுக்கு பரிந்துரை செய்து தீர்மானித்தது.

| பயனாளிகள் | அமைப்பு செலவு (ரூபாய் இலட் சத்தில்) | நிதி ஆதாரம் (ரூபாய் இலட்சத்தில்) | | சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் | தனி நபர் செலவு (ரூபாயில்) | 1000 லிட்டருக் கான குடிநீர் செலவு (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|---|
| | | குறைந்த பட்ச தேவை திட்டம் | உள்ளாட்சி யின் பங்களிப்பு | | | |
| காங்கேயம் பேரூராட்சி | 928.71 | 742.97 | 185.74 | – | 2981.00 | 23.93 |
| ஊரக குடியிருப்புகள் | 2641.56 | 2641.56 | – | – | 2360.00 | 22.69 |
| வெள்ளக் கோயில் நகராட்சி | 1203.73 | – | – | 1203.73 | 3067.00 | 7.69 |
| மொத்தம் | 4774.00 | 3384.53 | 185.74 | 1203.73 | 2618.00 (சராசரி) | 15.29 (சராசரி) |

இதன் அடிப்படையில் இத்திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

5. மேற்கண்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கருத்துருவினை நன்கு ஆராய்ந்த பின் அதனை ஏற்றுக்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது. அதன்படி திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களைச் சேர்ந்த வெள்ளக்கோயில் நகராட்சி, காங்கேயம் பேரூராட்சி மற்றும் 174 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தினை மொத்தம் ரூ.4774.00 இலட்சம் அமைப்புச் செலவிலும், மேலே பத்தி 4–ல் உள்ள

அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிதி ஆதாரம், விகிதாச்சார செலவு, தனி நபர்.செலவு மற்றும் 1000 லிட்டருக்கான செலவு ஆகிய அடிப்படையில் இத்திட்டத்தினை நிறைவேற்ற அரசு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.3715/F.5/P/09 நாள்3.1.2009 – ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை–5.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–108.
மாவட்ட ஆட்சியர், திருப்பூர் மாவட்டம். திருப்பூர்.
மாவட்ட ஆட்சியர், ஈரோடு மாவட்டம், ஈரோடு.
நகல்:
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதிஅமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்துறைச் செயலரின் தனிச்செயலர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலரின் தனிச் செயலர், சென்னை 9
பொது (நூலகம்) / நிதி துறை, சென்னை–9.
ந.நி.(ம) கு.வ. (அநமு2 / குவ2 / குவ3 / குவ4. / வசெ) துறை, சென்னை–9
இகோ / உ.நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
[illegible] /11/2010